நாள்: 05.07.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

# தினமலர்

**அமராவதி அணையிலிருந்து 7 நாட்களுக்கு தண்ணீர் திறப்பு**

**உடுமலை**:அமராவதி அணையிலிருந்து, விளைநிலங்களுக்கு, நேற்று, தண்ணீர் திறந்து விடப்பட்டது.திருப்பூர் மாவட்டம், உடுமலை, அமராவதி அணை வாயிலாக, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில், 55 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அமராவதி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு, தாராபுரம் நகராட்சியில், பல கூட்டுக்குடிநீர் திட்டங்கள் செயல்படுகின்றன.

வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், அணையிலிருந்து, பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, முழுமையாக தண்ணீர் வழங்க முடியாத நிலை உள்ளது.மேலும், அமராவதி ஆற்றுப் படுகையில், கடும் வறட்சி நிலவுவதால், தென்னை, கரும்பு சாகுபடி பணிகளையும் மேற்கொள்ள முடியாமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே, 'அமராவதி அணையிலிருந்து, உயிர் தண்ணீர் திறக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, அணையிலிருந்து, தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டது.இதன் அடிப்படையில், நேற்று காலை, 7:00 மணிக்கு, அணையிலிருந்து, வினாடிக்கு, 1,500 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. நேற்று, அணையின் நீர் மட்டம், முழு கொள்ளளவான, 90 அடியில், 38 அடியாக இருந்தது; அணைக்கு, வினாடிக்கு, 58 கன அடி நீர் வரத்து இருந்தது; அணையிலிருந்து, 1,511 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.'குடிநீர் தேவை மற்றும் உயிர் தண்ணீர் அடிப்படை யில்,

ஏழு நாட்களுக்கு, தொடர்ந்து, ஆற்றில் தண்ணீர் விடப்படும்' என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 'பருவமழை பொய்க்கும் வறட்சி அதிகரிக்கும்'



புதுடில்லி : 'இந்த ஆண்டு நாட்டின் சராசரி மழைப்பொழிவின் அளவு மிக குறைவாக இருக்கும்; வறட்சி அதிகரிக்கும்' என, தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### குறைந்த அளவே மழை

'ஸ்கைமெட்' என்ற தனியார் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:இந்த ஆண்டு, நாடு முழுவதும் பருவமழையில் பெரும் மாற்றம் காணப்படும். சராசரி மழைப் பொழிவை விட மிகவும் குறைந்த அளவே மழைப் பொழிவு இருக்கும். கடந்த, 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, மிக குறைந்த மழை பெய்யும். ஆண்டுக்கு, 96 - 104 சதவீதம் வரை மழைப்பொழிவு இருந்தால் அது சராசரி மழைப்பொழிவு எனப்படும். இந்த ஆண்டு சராசரிக்கும் குறைவாக, 91 சதவீத மழைப்பொழிவு மட்டுமே இருக்கும்.பருவமழை குறைவால், நாடு முழுவதும் 60 சதவீதம் வறட்சி ஏற்படும். வடமேற்கு மாநிலங்களில், 80 சதவீதமும், மத்திய மாநிலங்களில், 75 சதவீதமும், தென் மாநிலங்களில், 50 சதவீதமும் வறட்சி பாதிப்பு ஏற்படும். கடந்த மாதம், சராசரி அளவை விட, 43 சதவீதம் குறைவாக மழை பெய்துஉள்ளது. ஆனாலும்,

ஆகஸ்ட்டில் சில இடங்களில் நல்ல மழைப்பொழிவை எதிர்பார்க்கலாம். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

'இந்த ஆண்டு வறட்சி அதிகரிக்கும்' என, வானிலை ஆய்வு மைய தகவல்கள் வெளியாகி வரும் நிலையில், நாடு முழுவதும் உள்ள முக்கிய அணைகளில், கடந்த ஆண்டு நீர் இருப்புடன் இந்த ஆண்டு நீர் இருப்பு ஒப்பிடப்பட்டது.

### அணைகளில் நீர் இருப்பு குறைவு

அதில், தமிழகம், கேரளா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, இமாச்சல பிரதேசம், ஜார்க்கண்ட், உ.பி., உத்தரகண்ட், ம.பி., மேற்கு வங்கம், திரிபுரா ஆகிய, 12 மாநிலங்களில் உள்ள முக்கிய அணைகளில் நீர் இருப்பு வெகுவாக குறைந்துள்ளது தெரியவந்துள்ளது.

## முட்டை விலை 365 காசாக உயர்வு



**நாமக்கல்**:தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 365 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. அப்போது, முட்டை கொள்முதல் விலையில், இரண்டு காசு அதிகரித்து, 365 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 398, பெங்க-

ளூரு, 383, மைசூர், 388, ஐதராபாத், 353, மும்பை, 393, விஜயவாடா, 349, கோல்-கட்டா, 405, பர்வாலா, 309, டில்லி, 325.நாமக்கல்லில் நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 70 ரூபாயாக நிர்ணயம் செய்-யப்பட்டது.

## விவசாயிகளுக்கு களப்பயிற்சி

**சேலம்**: கரூர் மாவட்ட ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் சார்பில், மூன்று நாள் தொழில்நுட்ப பயிற்சி, நேற்று நடந்தது. விவசாயிகளுக்கான மானாவாரி வேளாண் சாகுபடி தொழில் நுட்பம் பற்றிய மூன்று நாள் பயிற்சி முகாம், சேலம் அஸ்தம்பட்டி பகுதியில் உள்ள தெற்கு வனப்பகுதி அலுலகத்தில், நேற்று நடந்தது.

ஏற்பாடுகளை, தேசிய நல மற்றும் வளர்ச்சி அறக்கட்டளை நிர்வாகம் செய்திருந்தது. இப்பயிற்சியிக்கு, சேலம் மண்டல வனப்பாதுகாவலர் கணேசன் தலைமை வகித்தார். சிறப்பு பயிற்றுனர்களாக, வேளாண் இணை இயக்குநர் (ஓய்வு) ஜனகன், மாவட்ட வன அலுவலர் இடைப்படுகாடுகள் கோட்டம் குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சியில், வேளாண் பயிர் சாகுபடி குறித்த தொழில்நுட்பம் பற்றியும், நீர், நிலவள மேம்பாடு, மழை நீர் சேகரிப்பு, பண்னை குட்டை அமைத்தல், மரம் வளர்ப்பு அவற்றின் பயன்பாடுகள், ஒருகிணைந்த பண்ணையம், வேளாண் விளைப்பொருட்கள் சந்தைப்படுத்துதல் பற்றிய களப்பயிற்சி நடந்தது. பயி ற்சியில், சேலம் மற்றும் கரூர் பகுதி விவசாயிகள், 60க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## ஊஞ்சலூரில் நெல் அறுவடை தீவிரம் அடுத்த நடவுக்கு தயாராகும் விவசாயிகள்

**ஈரோடு**: ஊஞ்சலூர் பகுதியில், நெல் அறுவடை தீவிரம் அடைந்துள்ளது. விவசாயிகள் அடுத்த நடவுக்கு தயாராகி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில், காலிங்கராயன் மற்றும் கீழ்பவானி வாய்க்கால் பாசனங்கள் பிரதானமாக உள்ளன. எல்.பி.பி.,யில் இரண்டாம் சுற்றுக்கு, கடந்த, இரண்டு ஆண்டுக்கும் மேலாக தண்ணீர் வழங்க இயலவில்லை. பவானிசாகர் அணையில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாததே, இதற்கு காரணம்.

காலிங்கராயன் வாய்க்காலிலும், கான்கிரீட் பணியால், வழக்கத்துக்கு மாறாக முன்னதாகவே, இந்தாண்டு நீர் வினியோகம் நிறுத்தப்பட்டது. காலிங்கராயன் வாய்க்கால் நீரைநம்பி இருந்த விவசாயிகள், பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். எனினும் சில விவசாயிகள், கிணறு மற்றும் போர்வெல் நீரைகொண்டு, நெல்லை சாகுபடி செய்துள்ளனர்.

வயல்களில் பறித்த நெற்பயிரைகாய வைத்து, நெல்மணிகளை இயந்திரத்தில் தனியாக பிரித்து, அவற்றை அளந்து மூட்டைகளாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஓரிரு நாட்களில், இப்பணி முடிந்தவுடன், அடுத்த நடவுக்காக நிலங்களை தயார்படுத்த தேவையான நடவடிக்கையை, விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து, ஊஞ்சலூரைசேர்ந்த விவசாயி கவின் கூறியதாவது: 120 நாள் பயிரான ஏ.டி.டி., 36 ரகத்தை பயிரிட்டு இருந்தோம். காலிங்கராயன் வாய்க்கால் பாசன பகுதியாகும் இது. கான்கிரீட் பணியால், இந்தாண்டு முன்னதாகவே, நீர் வினியோகத்தை நிறுத்தி விட்டனர்.

கிணற்று நீரைகொண்டு, நெற்பயிர்களை சாகுபடி செய்துள்ளோம். வயல்வெளிகளில் இருந்து முழுமையாக நெல்மணிகளை அறுத்து இயந்திரத்தில், தனியாக பிரித்து அவற்றை அளந்து, மூட்டைகளாக கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

இதற்காக, 15க்கும் மேற்பட்ட ஆண், பெண் விவசாய தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். தொகை மட்டுமின்றி, குறிப்பிட்ட அளவு நெல்லும், இவர்களுக்கு கூலி வழங்கப்படுகிறது. ஓரிரு நாட்களில், இப்பணி முடிந்து விடும். அதன் பின் அடுத்த நடவுக்காக விவசாய விளை நிலம் தயார் செய்யப்படும்.

வரும் நாட்களில் மழை பொழிவு, வாய்க்காலில் நீரோட்டம் போன்றவற்றை எதிர்பார்த்து, மஞ்சளை நடவு செய்ய திட்டமிட்டு உள்ளோம், என்றார்.

## டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி விரிவாக்க மையங்களுக்கு விடுமுறை 'கட்'

குறுவை சாகுபடிக்குத் தடையின்றி இடுபொருட்கள் கிடைத்திடும் பொருட்டு டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை வார விடுமுறை நாட்களிலும் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில், இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்தி, விவசாயிகளின் உற்பத்தியை இரு மடங்காகவும், வருவாயை மூன்று மடங்காகவும் உயர்த்திட சிறப்புத் திட்டங்களை, தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். அதனையொட்டி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்திட 'குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில், ஆழ்குழாய் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு செல்ல பிளாஸ்டிக் பைப், இடுபொருட்கள், உயிர் உரங்கள் 100 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. குறுவை சாகுபடியை ஊக்குவிக்க, டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை விடுமுறையின்றி, அனைத்து நாட்களிலும் விற்பனை செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

## மானாவாரி பருத்தி விதைப்புக்கு தியாகதுருகம் விவசாயிகள் ஆயத்தம்

**தியாகதுருகம்**: தியாகதுருகம் ஒன்றியத்தில் ஆண்டுதோறும் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகள் கனிசமாக லாபம் ஈட்டி வருகின்றனர். தென்மேற்கு பருவமழையால் கிடைக்கும் ஈரத்தை கொண்டு ஜூலை மாதம் விதைப்பு பணிகளை செய்கின்றனர். கடந்த மே மாதம் பெய்த கோடை மழை ஈரத்தை பயன்படுத்தி நிலத்தை உழுது சீர்படுத்தினர். கடந்த சில தினங்களாக தியாகதுருகம் பகுதியில் பெய்த மழையால் மண்ணின் ஈரத்தன்மை அதிகரித்துள்ளது. இதை பயன்படுத்தி விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்க ஆயத்தமாகி வருகின்றனர். கடந்த ஆண்டு அளவான மழையால் பஞ்சு மகசூல்

அதிகரித்து விவசாயிகள் கூடுதல் பலனடைந்தனர். இதனால் இவ்வாண்டு பருத்தி சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வேளாண் வளர்ச்சிப்பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் நேரில் ஆய்வு

**அரியலூர்**: அரியலூர் மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சிப்பணிகளை, மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ், நேரில் ஆய்வுசெய்தார்.

அரியலூர், வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், நபார்டு வங்கி திட்டத்தின் கீழ், 31 லட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில், புதிதாக கட்டப்பட்டுள்ள காய், கனி மற்றும் பழ வகைகளுக்கான, குளிர்பதன கிடங்குகளை கலெக்டர் சரவண வேல்ராஜ் பார்வையிட்டார். விவசாயிகள் தங்களது வேளாண் விளை பொருட்களை, இந்த குளிர் பதன கிடங்கில் இருப்பு வைத்து, நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்யலாம் என வேளாண் அதிகாரிகள், கலெக்டரிடம் தெரிவித்தனர். தொடர்ந்து, சாத்தமங்கலம் கிராமத்தில், 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும், குளம் தூர்வாரும் பணி, ஒரு லட்ச ரூபாய் நடைபெறும் தடுப்பணை கட்டுமான பணி, 50 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டை ஆகியவற்றை, கலெக்டர் பார்வையிட்டார். திருமானூரில், குறுவை சாகுபடி திட்டத்தை பார்வையிட்ட கலெக்டர், கார்த்திகேயன் என்பவரது வயலில், மூன்று லட்ச ரூபாய் அரசு மானியத்துடன், நான்கு லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, சோலார் பம்பு செட்டையும், அதன் மூலம் கரும்பு வயல், பாசன வசதி பெறுவதையும் பார்வையிட்டார்.

இதுபோன்ற விவசாய பணிக்கான சோலார் மின் திட்டம், 12 இடங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளதாக கலெக்டர் தெரிவித்தார். மேலும், திருமானூரில், 37 லட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பில் விதை சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகளை பார்வையிட்டார். கலெக்டர் ஆய்வின் போது, மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் முரளீதரன், நீர்வடிப்பகுதி துணை இயக்குநர் செந்தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## பாலக்கோடு பகுதிகளில் மழையளவு அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், சுமார், இரண்டு லட்சம் ஹெக்டருக்கு மேல் வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், பருவமழையை நம்பி, 60 ஆயிரம் ஹெக்டருக்கு மேல், சிறு தானிய பயிர்களான, ஆரியம், கம்பு, சோளம் உள்ளிட்டவை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மேலும், வாணியாறு, தொப்பையாறு, சின்னாறு உள்ளிட்ட அணைகள் மூலம், நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக போதிய பருவ மழையில்லாததால், தும்பலஹள்ளி உள்ளிட்ட அணைகளுக்கு, போதிய தண்ணீர் வரத்தின்றி இருந்தது.

குறிப்பாக, மாவட்டத்தில் கடந்தாண்டு விட, இந்தாண்டு பாலக்கோடு, மாரண்டஹள்ளி பகுதியில் மழை அளவு அதிகரித்தும், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் குறைந்துள்ளது. கடந்தாண்டு, ஜனவரி மாதம் முதல், ஜூன் மாதம் வரைதர்மபுரி பகுதியில், 14 நாட்களில், 272.5 மில்லிமீட்டர் மழையளவும், பாலக்கோட்டில், 10 நாட்களில், 206.2 மி.மீ., பென்னாகரத்தில், 11 நாட்களில், 213 மி.மீ., அரூரில், 10 நாட்களில், 222.6 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டியில், எட்டு நாட்களில், 169.5 மி.மீ., மாரண்டஹள்ளியில், 11 நாட்களில், 249 மி.மீ., ஒகேனக்கல்லில், எட்டு நாட்களில், 54.5 மி.மீ., மழையும் பதிவானது.

இந்தாண்டு ஜனவரி முதல், ஜூன் மாதம் வரைதர்மபுரியில், 13 நாட்களில், 237 மி.மீ., பாலக்கோட்டில், 17 நாட்களில், 341.9 மி.மீ., பென்னாகரத்தில், 11 நாட்களில், 148 மி.மீ., அரூரில், 11 நாட்களில், 147.9 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டியில், 11 நாட்களில், 148.2 மி.மீ., மாரண்டஹள்ளியில், 18 நாட்களில், 358 மி.மீ., ஒகேனக்கல்லில், 12 நாட்களில், 162.7 மி.மீ., மழையளவு பதிவாகி உள்ளது. இதில், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, ஒகேனக்கல் ஆகிய பகுதிகளில், கடந்தாண்டு ஜனவரி முதல், ஜூன் பெய்த மழையளவை விட, இந்தாண்டு கூடுதல் மழையளவு பதிவாகி உள்ளது. அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம், தர்மபுரி ஆகிய பகுதிகளில், கடந்தாண்டு ஜனவரி மாதம் முதல்,

ஜூன் மாதம் வரைபெய்த மழையளவை விட, இந்தாண்டு, ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரைகுறைவாக பதிவாகி உள்ளது.

## மாவட்டத்தில் தீவன பற்றாக்குறை: மாடுகளை விற்கும் விவசாயிகள்

**தர்மபுரி**: தர்மபுரியில், தீவன பற்றாக்குறையால், மாடுகளை, அடிமாடுகளாக விற்பனை செய்யும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், விவசாயத்துடன், ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்தில், கடந்தாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், அணைகள் மற்றும் ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில், நிலத்தடி நீர்மட்டம் கேள்வி குறியானதால், விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்தாண்டும் தென்மேற்கு பருவமழை விவசாயிகளை வஞ்சித்து வருவதால், கிணறும் மற்றும் போர்வெல்களிலும் தண்ணீரின் அளவு பாதாளத்துக்கு சென்றுள்ளது. இதனால், மாவட்டத்தில் விவசாய தொழில் பாதிக்கப்பட்டு உள்ளதுடன், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவன பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

இதனால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தாங்கள் வளர்த்து வரும் பசு மற்றும் எருமை மாடுகளை அடிமாடுகளாக விற்பனை செய்கின்றனர். இதனால், மாவட்டத்தில் நல்லம்பள்ளி, காரிமங்கலம் வாரசந்தைகளுக்கு, விவசாயிகள் கொண்டு வரும் மாடுகளை கேரளா வியாபாரிகள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து, விவசாயி கணேசன் கூறியதாவது:

மாவட்டத்தில், தொடர்ந்து பருவமழை ஏமாற்றி வருவதால், மாடுகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன், அவற்றின் விலையும் உயர்ந்துள்ளது.

குறிப்பாக, மாடுகளுக்கான, ஊட்டசத்து பொருட்களின் விலை, நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. ஆனால், பாலின் கொள்முதல் விலையில், பெரிய அளவில் மாற்றமின்றி உள்ளது. இதனால், மாடுகள் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் வருமானத்தை விட, தற்போது, அவற்றை வளர்க்கும் செலவு பல மடங்கு உயர்ந்துள்ளது.

எனவே, மாடுகளை வளர்த்து வரும் பெரும்பாலான விவசாயிகள் அவற்றை அடிமாடுகளாக சந்தைகளில் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

இதை தடுக்க, விவசாயிகளுக்கு தமிழக அரசு கிணறு வெட்ட மற்றும் போர்வெல் அமைக்க, மானியத்துடன் கடன் உதவி வழங்க வேண்டும். மேலும், ஊட்டசத்து பொருட்களின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், பாலின் கொள்முதல் விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## ஏமாற்றி வரும் பருவமழையால் அணைகளில் குறையுது நீர்மட்டம்

**ஊட்டி**: ஊட்டியை ஏமாற்றி வரும் பருவமழையால், அணைகளில், நீர்மட்டம் குறைந்து வருகிறது. நகரின் பிரதான அணையில் இருந்து மின் உற்பத்திக்கு தாராளமாக தண்ணீர் எடுக்கப்படுவதால், தண்ணீர் தட்டுப்பாடு தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் ஜூன், ஜூலை மாதங்களில் தட்டியெடுக்கும், தென் மேற்கு பருவ மழை, ஊட்டியில் கொட்டி தீர்க்கும். இந்த பருவமழை தான், நகர மக்களின் நீர் தேவையை ஆண்டு முழுக்க சமாளிக்க உதவும். தவிர, நகரின் பிரதான அணையான பார்சன்ஸ்வேலி அணையில் நிரம்பும் நீர், மின்வாரியத்தினரால் மின் உற்பத்திக்கும் எடுக்கப்படுகிறது.

ஏமாற்றும் பருவமழை

இந்தாண்டு தென் மேற்கு பருவ மழை, ஊட்டியை ஏமாற்றி வரும் நிலையில், ஊட்டியில் உள்ள அணைகளில், நீர் மட்டம் குறைய துவங்கியுள்ளது. நகரின், பிரதான அணையான பார்சன்ஸ்வேலி அணையின் நீர்மட்டம், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், பா திக்கு பாதியளவு குறைந்துள்ளது. "இந்த அணையில் இருந்து<,

மின் வாரியத்தினர், தாராளமாக நீரை மின் உற்பத்திக்கு எடுத்து கொள் வதும், அணையின் நீர் மட்டம் உயராததற்கு காரணம்' என, கூறப்படுகிறது. எனவே, அணை நீரை 20 அடிக்கு குறையாமல் இருக்கும் வகையில், மின் உற்பத்திக்கான நீரை எடுக்க, நகராட்சி நிர்வாகம் சார்பில், மின்வாரியத்தினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## உரக்கடைகளில் ஆய்வு அதிகாரிகள் எச்சரிக்கை

**பழநி**:பழநி சுற்றுபகுதிகளிலுள்ள உரக்கடைகளில் உள்ள குறைகளை ஐந்து நாட்களுக்குள் சரிசெய்ய, வேளாண்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணைஇயக்குனர் அலுவலக தரக்கட்டுபாடு உதவிஇயக்குனர் ரவிச்சந்திரன், பழநி வேளாண் அலுவலர் கணேசன் ஆகியோர் பழநி, நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி, அ.கலையம்புத்தூர், பாப்பம்பட்டி உள்ளிட்ட ஊர்களில் உள்ள 40 உரக்கடைகளில் திடீர் ஆய்வுமேற்கொண்டனர்.

உரக்கடைகளின் இருப்புவிபரம், பூச்சிமருந்து, விலைபட்டியல், காலாவதியாகாத மருந்துகள், அங்கீகரிக்கப்பட்ட உரங்கள் விற்கப்படுகிறதா என ஆய்வு செய்யப்பட்டது.

கடைகளிலுள்ள சிறிய குறைகளை 5 நாட்களில் சரிசெய்யவேண்டும். இதை மீறுபவர்கள் மீது, அத்தியாவசிய பொருட்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என உதவி இயக்குனர் எச்சரிக்கை செய்தார்.

## பாபநாசம் அணை திறந்தும் பயன் இல்லை 70 ஆயிரம் ஏக்கர் விவசாயிகள் ஏமாற்றம்

**திருநெல்வேலி**,: பாபநாசம் அணை நீரை திறந்தும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஆண்டுதோறும் ஜூன் முதல் தேதியன்று கார் பருவ நெல்சாகுபடிக்காக பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்..

ஆனால் இந்த ஆண்டு மே மாதத்தில் போதிய மழை பெய்தும் அதிகாரிகள் தண்ணீரை சேமிக்க முயற்சிக்கவில்லை. இதனால் அணையில் நீர்மட்டம் குறைந்தது. ஜூன் மாதம் திறக்கப்படவேண்டிய பாபநாசம் அணை ஒரு மாதத்திற்கு பிறகு நேற்று ஜூலை 4ம் தேதி திறந்துவிடப்பட்டது.வழக்கமாக நெல்லையில் 40 ஆயிரம் ஏக்கரும், தூத்துக்குடியில் சுமார் 48 ஆயிரம் ஏக்கரிலும் நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும். ஆனால் நேற்று அமைச்சர் செந்தூர்பாண்டியன், கலெக்டர் கருணாகரன் ஆகியோர் தண்ணீரை திறந்துவைத்துவிட்டு, வடக்கு, தெற்கு கோடைமேலழகியான், நதியுண்ணி, கன்னடியன் ஆகிய நான்கு கால்வாய்கள் மூலம் 18 ஆயிரத்து 90 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே 700 கனஅடி வீதம் 120 நாட்கள் தண்ணீர் வழங்கப்படும் என தெரிவித்தனர்.

நெல்லை மாவட்டத்தில் கோடகன்கால்வாய், திருநெல்வேலி கால்வாய், பாளையங்கால்வாய் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர், ஸ்ரீவைகுண்டம் கால்வாய்களுக்கு திறப்பதற்கு தண்ணீர் இல்லை என தெரிவித்துவிட்டனர். இதனால் மீதமுள்ள 70 ஆயிரம் ஏக்கரிலும் கார் பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளமுடியாமல் போய்விட்டது. மே மாதத்தில் பெய்த கோடை மழையினை பொதுப்பணித்துறை துறைகள் வீணடிக்காமல் சேமித்திருந்தால் இந்த முறை முழுமையான பாசனம் பெற்றிருக்கும் என விவசாயிகள் அங்கலாய்த்தனர்.படம் உள்ளது.

**உரிய ஆவணங்கள் இல்லாத 5 டன் உரம் விற்க தடை**

**சின்னமனூர்**: சின்னமனூரில் உரக்கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தியதில், ஐந்து டன் கலப்பு உரம் உரிய ஆவணங்கள் இல்லாமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது. தேனி மாவட்டத்தில் உர விற்பனையில் தரம், இருப்பு, மற்றும் முறையான விற்பனை குறித்து கலெக்டர் பழனிசாமி உத்தரவின் பேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர் ஜெயபாண்டியன் தலைமையிலான அதிகாரிகள் தேனி மாவட்டத்தில் உர விற்பனை கடைகளில் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். இதில் சின்னமனூர் மெயின் ரோட்டில் உள்ள கடை ஒன்றில் உரிய ஆவணங்கள் இல்லாமல் 5 டன் உரம் இருப்பு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த உரத்தின் தரத்தில் பல்வேறு சந்தேகங்கள் இருந்ததால் அதன் விற்பனைக்கு தடை விதித்து அதிகாரிகள் உத்தரவிட்டனர்.மேலும் இந்த உரம் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**மீன் பிடி ஒழுங்குமுறை சட்டத்தில் திருத்தம் செய்தால் அனைத்து மாவட்ட மீனவர்கள் கருத்துகேட்க வேண்டும் : மீனவர்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில் கோரிக்கை**

**தூத்துக்குடி**:மீன்பிடி ஒழுங்கு முறைச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் போது அனைத்து மாவட்ட மீனவர்களின் கருத்து கேட்டு திருத்தம் செய்ய வேண்டும், என மீனவர்கள் தெரிவித்தனர். தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் மீனவர்கள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் நடந்தது. இதில் மீன் வளத்துறை, மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். மீனவர்கள் சங்க பிரதிநிதி கயஸ்: தமிழகத்தில் 1967 க்குப்பின்

தான் விசைப்படகுகள் வரத் துவங்கின. அதன் பின்பு உயிர் சேதம், கடல் வளப்பாதிப்புகள் அதிகரித்தது. மீனவர்கள் கோரிக்கை விடுத்தையடுத்து சுப்ரீம் கோர்ட் வழிகாட்டுதலின் படி, மீன் வளத்துறை, மற்ற துறை அதிகாரிகள் கலந்து ஆலோசனை நடத்திய பின்னர் 1981 ல் மீன் பிடி ஒழுங்கு முறைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் படி விசைப்படகுகள் நீளம் 15மீட்டர், இயக்கும் மோட்டார் இயந்திரங்கள் 120 ஹார்ஸ் பவர் மட்டுமே இருக்க வேண்டும். தற்போது மாற்றம் செய்யப்பட்டு படகுகள் 20 மீட்டர் நீளம், மோட்டார் 150 ஹார்ஸ் பவர் பயன்படுத்தலாம் என, மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் நாட்டுப்படகு மீனவர்களின் வலைகளை விசைப்படகுகள் சேதப்படுத்துகின்றன. அப்போது காலை 5 மணிக்கு கடலுக்கு செல்லும் படகுகள், இரவு 9 மணிக்குள் திரும்ப வேண்டும். அன்றைய காலத்திற்கு இது சரியாக இருந்தது. தற்போது அதிக விசையுடன் படகுகள் இயக்கப்படுவதால், விரைவில் கரைக்கு திரும்புகின்றனர். இதனால் தான் பாதிப்புகள் ஏற்படுகிறது. மீன் பிடி ஒழுங்குமுறை சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் போது அனைத்து மாவட்ட மீனவர்கள் கருத்துக்கள் கேட்கப்பட்டு திருத்தம் செய்ய முன் வர வேண்டும், என்றார்.

மீனவ பிரதிநிதி ஜான்சன்: தூத்துக்குடியில் அனல் மின் நிலைய கழிவு நீர் கடலில் கலக்குவதால் மீன் வளம் பாதிக்கப்படுகிறது. நிலக்கரி சாம்பலால் மீன் வளம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் கடற்கரை பகுதியில் அனல் மின் நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்க கூடாது, என அவர் பேசினார்.லில்லி மார்க்ரெட்: மீனவர்கள் நல வாரியத்தில் மீனவர்களுக்கு கல்வி உதவித்தொகை, ஓய்வூதியம்,விதவை உதவித்தொகைகள் கிடைப்பதில்லை. சென்னை கமிஷனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டும் பயனில்லை. மீனவர்களுக்கு உழவர்

பாதுகாப்பு திட்டத்தில் வழங்கப்படும் அனைத்து உதவிகளும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார். இந்த கோரிக்கைகள் பரிசீலிப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமணி

**<u>வேளாண் பல்கலை. கலந்தாய்வு: இதுவரை 1,215 பேருக்கு சேர்க்கை</u>**




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 5 நாள்களாக நடைபெற்று வரும் இளநிலைப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வில் 1,215 பேர் பல்வேறு பாடப் பிரிவுகளில் சேர்ந்துள்ளனர்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 5 நாள்களாக நடைபெற்ற கலந்தாய்வுக்கு 2,334 மாணவ, மாணவிகள் அழைக்கப்பட்டனர். இதில், 1,442 பேர் பங்கேற்றனர். 1,215 பேர் பல்வேறு பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இதில் கோவை, மதுரை, கிள்ளிக்குளம், திருச்சியில் உள்ள

பல்கலைக்கழக கல்லூரிகளில் பி.எஸ்சி. வேளாண்மை படிப்புகளுக்கான அனைத்து இடங்களும் நிரம்பிவிட்டன.

**சின்னமனூர் வாரச்சந்தையில் காய்கறி விலை உயர்வு**

**உத்தமபாளையம்**

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் பருவமழை தவறிய காரணத்தால் சின்னமனூர் சந்தையில் காய்கறி விலை உயர்ந்துள்ளது.

சின்னமனூரில் வாரந்தோரும் வியாழக்கிழமை சந்தை நடைபெறுகிறது. வாரச்சந்தையில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் விளைந்த காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர்.

சின்னமனூரை சுற்றியுள்ள சீலையம்பட்டி, அய்யம்பட்டி, கோட்டூர், பூலானந்தபுரம், கன்னிச்சேர்வைபட்டி, முத்தலாபுரம், சீப்பாலக்கோட்டை, குச்சனூர், மார்க்கையன்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள 48க்கும் மேற்பட்ட கிராமங்களில் காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் அதிகளவில் பீன்ஸ், முட்டைக்கோஸ், காலிபிளவர், அவரைக்காய், பீட்ரூட், கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய், மச்சமிளகாய், வெங்காயம் மற்றும் பாகற்காய் ஆகியவை விளைவிக்கப்படுகின்றன.

இந்நிலையில் தென்மேற்கு பருவமழை, ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும் என எதிர்பார்த்த நிலையில், மழை இல்லாததால் கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது. இதனால் விவசாயத்துக்கு போதுமான தண்ணீர் இல்லாமல், காய்கறி விவசாயம் முற்றிலும் பாதிப்படைந்துள்ளது.

சந்தைக்கு காய்கறிகளின் வரத்தும் குறைந்துவிட்டது. கடந்த வாரம் விற்பனை செய்யப்பட்ட விலையை விட, அனைத்து காய்கறிகளின் விலைகளும் இருமடங்காக உயர்ந்துவிட்டன.

வியாழக்கிழமை நடைபெற்ற வாரச்சந்தையில் (1 கிலோ விலையில் )பீன்ஸ் ரூ.60, கேரட் ரூ.50, முட்டைக்கோஸ் ரூ.50, அவரைக்காய் ரூ.40, வெண்டைக்காய் ரூ.30, கத்தரிக்காய் ரூ.30, பாகற்காய் ரூ.60, சின்ன வெங்காயம் ரூ.20. பெரிய வெங்காயம் ரூ.30 என விலை உயர்வாகவே காணப்பட்டது. விவசாயிகள் கூறுகையில், காய்கறிகள் விலை சற்று அதிகமாக காணப்பட்டதால் பொதுமக்கள் வாங்கும் அளவை குறைத்துக்கொண்டனர். இந்த விலை உயர்வால் கடந்த வாரத்தில் சந்தைக்கு வந்த பொதுமக்கள் கூட்டத்தை விட, தற்போது குறைந்த எண்ணிக்கையில் பொதுமக்கள் வருவதாக தெரிவித்தார். மேலும் ஆடி மாதம் வரை விலை குறைய வாய்ப்பில்லை எனவும் தெரிவித்தார்.

## ரூ.20 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

**கோபி**

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற கொப்பரை ஏலத்தில் 378 மூட்டைகள் ரூ.20 லட்சத்துக்கு ஏலம் போனது.

வாரந்தோறும் வியாழக்கிழமை கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கொப்பரை ஏலம் நடக்கிறது. அதன்படி, ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் இருந்து ஏராளமான விவசாயிகள் கொப்பரையை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். ஒரு கிலோ கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.98.91க்கும், அதிகபட்சமாக ரூ.100.39க்கும் விலை போனது. மொத்தம் வந்திருந்த 378 மூட்டைகள் ரூ.20 லட்சத்துக்கு ஏலம் போனது.

திருப்பூர், கோவை, ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் கொப்பரையை ஏலம் எடுத்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 47.01 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 47.01 அடியாக இருந்தது.அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 302 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 850 கன அடி நீர்

திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.7 டி.எம்.சி.

## <u>மழைநீர் சேகரிப்பு: உதகையில் பயிற்சி முகாம்</u>

**உதகை**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், மழைநீர் சேகரிப்பு தொடர்பான பயிற்சி முகாம் உதகையில் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமை, ஆட்சியர் பி.சங்கர் தலைமையேற்று தொடங்கி வைத்தார். அவர் பேசியதாவது:

தமிழக முதல்வரின் முத்தான திட்டங்களுள் ஒன்றான மழைநீர் சேகரிப்பு திட்டம், நீலகிரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருவதால் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை செயல்படுத்த வேண்டியது அவசியம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இதர அரசு மற்றும் தனியார் துறைகள் ஒருங்கிணைந்து பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர். இத்திட்டத்தின் தொடர்ச்சியாக அனைத்து அரசு அலுவலகங்கள்,

தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், தனியார் ஆகியோர்

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தவும், ஏற்கெனவே இத்திட்டத்தின் கீழ் செயலாக்கத்தில் உள்ள கட்டமைப்புகளை புனரமைப்பு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் வேண்டும் என்றார்.

பயிற்சி முகாமில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் ஸ்ரீநிவாச ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் அப்பாவு, உதவி நிர்வாகப் பொறியாளர்கள் முரளிகணேசன், சந்திரன்குட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>அலங்கார மீன் வளர்க்க தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்: ஆட்சியர்</u>**

**ராமநாதபுரம்**

அரசு மானியத்துடன் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு மேற்கொள்ளத் தகுதியுடைய பயனாளிகள் விண்ணப்பிக்கலாம் என ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் வியாழக்கிழமை கேட்டுக் கொண்டார்.

செய்திக்குறிப்பு: ராமநாதபுரம் மாவட்டத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார வண்ண மீன்களின் வளர்ப்பை மேற்கொள்ளத் தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் விண்ணப்பதாரர் இம்மாதம் முதல் தேதியிலிருந்து 50 வயதுக்கு குறைவானவராக இருக்க வேண்டும். மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், விசைப்படகு உரிமையாளர்கள், மீன்வளர்ப்பு பயிற்சி பெற்றவர்கள், மீன்வள பட்டயப்படிப்பு முடித்தவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயனாளிகளின் தேர்வு, தகுதி மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் நடைபெறும்.விருப்பமுள்ள பயனாளிகள் மீன்வள உதவி இயக்குநர் (வடக்கு) ராமநாதபுரம் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பத்தினை இம்மாதம் 18 ஆம் தேதிக்குள் அளிக்கும்படி அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>பயிர் மதிப்பீட்டு ஆய்வுக் கூட்டம்</u>**

**திருப்பூர்,**

வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு பயிர் மகசூல் குறித்த ஆய்வு மேற்கொள்வதற்கான பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில், பயிர் மதிப்பீட்டு ஆய்வு மற்றும் தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம் குறித்த புத்தூட்ட பயிற்சி முகாமை மாவட்ட வருவாய் அலுவலர் த.பாரிவேல் தொடங்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்ட புள்ளியியல் துறை துணை இயக்குநர் கருப்பசாமி வரவேற்றார். கோவை மாவட்ட புள்ளியியல் துறை இணை இயக்குநர் நந்தகுமார், வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தார். தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் கண்காணிப்பாளர் அனந்தகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், வேளாண்மைத் துறையின் உதவி வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், தோட்டக்கலைத் துறையின் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலமாக திருப்பூர் மாவட்டத்தின் பயிர் விளைச்சல் குறித்த விவரங்கள் தெரியவரும்.

**கரூரில் லேசான மழை**

**கரூர்,**

கரூரில் வெள்ளிக்கிழமை மாலை லேசான மழை பெய்தது. காலை முதல் மாலை 5 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

தொடர்ந்து, 6 மணியளவில் லேசான மழை பெய்தது. இதனால், சாலைகளில் மழைநீர் ஓடியது. 6.30 மணி வரை பெய்த மழையால் நகரெங்கும் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது.

**ஜூலை 8-ல்வேளாண்மையில் கணினி, இணையதள பயன்பாடு குறித்த பயிற்சி**

**நீடாமங்கலம்**

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 8-ம் தேதி வேளாண்மையில் கணினி மற்றும் இணையதள பயன்பாடு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளண்மையில் கணினி மற்றும் இணையதள பயன்பாடு குறித்து ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்கள் தங்கள் பெயர்களை நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04367-261444,04367-260666 என்ற எண்ணிலோ முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**<u>நெல்லுக்கு ரூ. 2,500-க்கும் குறையாமல் விலை நிர்ணயம்</u>**

**தக்கலை,**

நெல்லுக்கு அரசு விலையாக குவிண்டாலுக்கு ரூ. 2,500-க்கு குறையாமல் ஆதாரவிலை நிர்ணயித்து விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கவேண்டுமென விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாவட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்க செயற்குழுக் கூட்டம் வில்லுக்குறியில் நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத் தலைவர் வி.சி.வி.ரத்தினம் தலைமை வகித்தார். செயலர் தங்கமரியான் அறிக்கை வாசித்தார். கூட்டத்தில் பி.ஆறுமுககண்ணன், தவசி, லீலா, திரசம்மாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வில்லுக்குறி பேரூராட்சிக்குள்பட்ட இனியூர் குளத்தை ஆழப்படுத்தி, நில அளவை செய்து, எல்லை நிர்ணயம் செய்து ஆக்கிரமிப்புகளை காவல் துறை மூலம் அகற்றித் தரவேண்டும், மேலப்பள்ளம் தூவலாறு குறுகிய பாலத்தை அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து விரிவாக்கம் செய்யவேண்டும்.

நெல்லுக்கு அரசு விலையாக ரூ. 2,500-க்கு குறையாமல் ஆதார விலை நிர்ணயிக்க மத்திய, மாநில அரசுகளை கேட்டுக்கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**<u>மீனவர்களிடம் கருத்து கேட்க குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்</u>**

**தூத்துக்குடி,**

தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத் திருத்தம் குறித்து அனைத்து தரப்பு மீனவர்களிடமும் கருத்து கேட்க வேண்டும் என தூத்துக்குடியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மீனவர்கள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் ம. ரவிக்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மீன்வளத் துறை இணை ஆணையர் அமல்சேவியர், உதவி ஆணையர் ஐசக் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தருவைகுளம் ஊராட்சித் தலைவர் மகாராஜன் பேசியதாவது: புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்த மீனவர்களுக்கு நீண்ட நாள்களாக அட்டை வழங்கப்படவில்லை. தருவைகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள தலைமையாசிரியர், கணினி ஆசிரியர் பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டும். தருவைகுளம் கிராமத்துக்கு தனியாக கிராம நிர்வாக அலுவலரை நியமிக்க வேண்டும். தருவைகுளம் பேருந்து நிலையத்துக்குள் வந்து செல்ல வேண்டும் என்ற உத்தரவு உள்ள 4 வழித்தட பேருந்துகள் அங்கு வராமல் உள்ளது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் ம. ரவிக்குமார் உறுதியளித்தார்.

இதையடுத்து டி. சவேரியார்புரத்தைச் சேர்ந்த லில்லி மார்கரெட் பேசியதாவது: 60 வயது நிரம்பிய பெண்களுக்கு மீனவர் நல வாரியம் மூலம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்து ஆட்சியர் பேசியதாவது: உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு உள்ள அனைத்துச் சலுகைகளும் மீனவர் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு கிடைக்க வேண்டும் என அரசுக்கு பிரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கயஸ் பேசியதாவது: தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தில் (1983) திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இதுதொடர்பாக சென்னையில் அண்மையில் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சட்டத்திருத்தம் தொடர்பாக அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் உள்ள மீனவ கிராமங்களின் பிரதிநிதிகள், விசைப்படகு மற்றும் நாட்டுப் படகு உரிமையாளர்கள், தொழிலாளர்களிடம் கருத்துக் கேட்ட பிறகே முடிவு செய்ய வேண்டும் என்றார். தூத்துக்குடி மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் பார்த்திபன் பேசியதாவது: மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இல்லாமல் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் மட்டும் உறுப்பினர்களாக உள்ளவர்களிடமும் நல வாரியம் மூலம் சந்தாதொகை வசூலிக்கப்பட்டு வருகிறது என குற்றம்சாட்டினார்.

இதையடுத்து கடல்சார் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 7 பேருக்கு ரூ.2.50 லட்சத்துக்கான காசோலையையும், விபத்தில் உயிரிழந்த மீனவரின் மனைவிக்கு தேசிய மீனவ கூட்டுறவு சம்மேளனத்தின் மூலம் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் ஆட்சியர் ம. ரவிக்குமார் வழங்கினார்.

**<u>கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணை திறப்பு</u>**

***திருநெல்வேலி/ அம்பாசமுத்திரம்,***

கார் பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணையிலிருந்து வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன்மூலம் முதல் கட்டமாக தாமிரவருணி பாசனத்தில் 18,090 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என அமைச்சர் பூ. செந்தூர்பாண்டியன் தெரிவித்தார்.

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி, பாபநாசம் அணையிலிருந்து ஆட்சியர் மு. கருணாகரன் முன்னிலையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பூ. செந்தூர்பாண்டியன் தண்ணீரைத் திறந்துவிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கார் பருவ சாகுபடிக்கு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, தாமிரவருணி பாசனத்தில் வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய் ஆகிய 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 18.090 ஏக்கர் நிலங்களுக்கு முதல் கட்டமாக வெள்ளிக்கிழமை 700 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை மூலம் அணைகளுக்கு நீர்வரத்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணைகளின் நீர் இருப்பு, விவசாயத் தேவையை கருத்தில்கொண்டு அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்களுக்கு முழுமையாகப் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்துவிடப்படும். விவசாயிகள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி பாசனம் செய்ய வேண்டும் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில், எம்.பி.க்கள் எஸ். முத்துக்கருப்பன், விஜிலா சத்தியானந்த், வசந்தி முருகேசன், மேயர் (பொ) பூ. ஜெகநாதன், பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் வி. நட்டார், செயற்பொறியாளர் மா. முத்துபாண்டியன், மாவட்ட ஊராட்சித் தலைவர் பா. நாராயணபெருமாள், உதவிப் பொறியாளர் மாயன்முருகன், மின்வாரிய செயற்பொறியாளர் வி. ஸ்ரீதர், உதவிச் செயற்பொறியாளர்கள் எஸ். பாலசுப்பிரமணியன், டி.எம். டேவிட், வேளாண் துறை இணை இயக்குநர் சந்திரசேகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் இ. ராஜன், மக்கள் தொடர்பு அலுவலர் க. மாரியப்பன், வி.கே.புரம் நகராட்சித் தலைவர் இ. மனோன்மணி, துணைத் தலைவர் தி. கணேசபெருமாள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பரமசிவஐயப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி: பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து, கல்லிடைக்குறிச்சி அருகே கன்னடியன் அணைக்கட்டில் தண்ணீர் திறக்கப்பட்டது. இக்கால்வாய் மூலம் பாசன நிலங்களுக்கு 300 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

நிகழ்ச்சியில் உதவிப் பொறியாளர் இந்திரா, கல்லிடைக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் க. இசக்கிபாண்டியன், நீர்ப்பாசன சங்க நிர்வாகிகள் இரா. சுப்பையா, கண்ணப்பநயினார், முன்னாள் பேரூராட்சித் தலைவர் ச. பாபநாசம் மற்றும் சேரன்மகாதேவி, பத்தமடை, கோபாலசமுத்திரம் பகுதியில் விவசாயிகள் பங்கேற்றனர்.

இம்மாவட்டத்தில் 12,500 ஏக்கர் பாசனம் பெறும் கன்னடியன் கால்வாய் பாசனத்தில், 5,000 ஏக்கரில் வாழைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாழைப்பயிரை காப்பாற்ற விளைநிலத்தில் ஆழ்துளை மோட்டார் வைத்து அதிக செலவில் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வந்தனர்.

கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதையடுத்து, விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய்களில் சனிக்கிழமை திறந்துவிடப்படும்.

அணைகளின் நீர்மட்டம்: வெள்ளிக்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணை நீர்மட்டம் 59.75 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 72.34 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 61.86 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 50.20 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 69 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 44.71 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 58.50 அடியாகவும் இருந்தது. பாசனத்துக்காக கடனாநதி அணையிலிருந்து 120 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 60 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**<u>பட்டுப்புழு வளர்க்க விவசாயிகளுக்கு வீடு தேடி உதவி - இயக்குநர்</u>**

**கடலூர்,**

பட்டுப்புழு வளர்க்க ஆர்வம் உள்ள விவசாயிகளுக்கு வீடு தேடி சென்று உதவி செய்யத் தயராக இருப்பதாக, பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் எஸ்.பிரபாகரன் கூறினார்.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். அதையொட்டி, பட்டு வளர்ச்சித் துறை சார்பில் மாவட்டம் தோறும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம், கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கடலூர் பீச் ரோட்டில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் பட்டுப்புழு வளர்ப்புக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடந்தது. இதற்கு மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமை வகித்தார்.

பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் எஸ்.பிரபாகரன் பேசியதாவது: தமிழகத்தில் 32 ஆயிரம் ஏக்கரில் 20 ஆயிரம் விவசாயிகள் மல்பரி செடி வளர்த்து பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை மேற்கொள்கிறார்கள். கடலூர் மாவட்டத்தில் 100 ஏக்கரில் 57 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் செய்கிறார்கள்.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ஏக்கருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாயை மானியமாக அரசு வழங்குகிறது. முன்பு பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிகளுக்கு பட்டுப்புழுவின் முட்டைகளை வழங்கி வந்தோம்.

இப்போது 17 நாள் வளர்ச்சியடைந்த பட்டுப் புழுக்களை வழங்குகிறோம்.

கடலூர் மாவட்டம் வெப்பமான மாவட்டமாக இருப்பதால் வீடு போல் கூடாரம் அமைத்துதான் பட்டுப்புழு வளர்க்க வேண்டியுள்ளது. எனவே 1,500 சதுர அடி பரப்பளவுள்ள கூடாரம் (ஷெட்) அமைக்க 82 ஆயிரத்து 500 ரூபாயும், 1,000 சதுர அடி அளவுள்ள கூடாரங்கள் அமைக்க 87 ஆயிரத்து 500 ரூபாயும் மானியமாக அரசு வழங்குகிறது.

ஓசூரில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு மையத்தில் விவசாயிகளுக்கு பயிற்சியும், பட்டுப்புழு முட்டைகளும் வழங்கப்படுகிறது.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்புத்துறை உதவி இயக்குநரை அணுகலாம் என்றார் எஸ்.பிரபாகரன்.

**கரும்பு விவசாயிகளுக்கு அரசு அறிவித்த கொள்முதல் விலையை சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டும் முத்தரப்பு கூட்டத்தில் கலெக்டர் ஹரிஹரன் வலியுறுத்தல்**



**விருதுநகர்,**

கரும்பு விவசாயிகளுக்கு அரசு அறிவித்த கொள் முதல் விலையை சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டும் என கரும்பு உற்பத்தி தொடர்பான முத்தரப்பு ஆலோசனை கூட்டத்தில் கலெக்டர் ஹரிஹரன் கூறினார்.

முத்தரப்பு கூட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி தொடர்பான முத்தரப்பு கூட்டம் நடந்தது. கலெக்டர் ஹரிஹரன் தலைமை தாங்கினார். மாவ ட்ட வருவாய் அலுவலர் முனு சாமி முன்னிலை வகித்தார். இதில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் செல்வம், கூட் டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் குருமூர்த்தி,

வேளாண்மை துணை இயக்குனர் ஜோசப் மரிரெக்ஸ் மற்றும் அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அலுவலர்கள், வாசு தேவநல்லூர் தரணி சர்க்கரை ஆலை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயி கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலெக்டர் ஹரிஹரன் பேசும்போது கூறியதாவது, கரும்புக்கு 2014-ம் ஆண்டில் அரவை பருவத்திற்கு அரசு அறிவித் துள்ள கொள்முதல் விலை யான ரூ.2 ஆயிரத்து 650-ஐ, விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், ஸ்ரீவில்லி புத்தூர் மற்றும் வத்திராயிருப்பு பகுதியில் கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் சரியான முறையில் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் வழங்க வேண்டும்.

<u>கொள்முதல் விலை</u>

அரசு நிர்ணயம் செய்த கொள்முதல் விலையை விட குறைவான தொகை வழங்கப் பட்டு வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.எனவே அரசு அறிவித்த தொகையை முழு மையாக வழங்க சர்க்கரை ஆலை நிர்வாகம் முன்வர வேண்டும். மேலும் கரும்பு உற்பத்தி விவசாயிகள் பயன் பெறும் வகையில் ஆலைக்கு கரும்பு அனுப்பிய 15 நாட் களுக்குள் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். தற்போது நிலவி வரும் வறண்ட காலநிலையில் பல்வேறு சிரமங்களுக்கு இடையே கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் சர்க்கரை ஆலை நிறுவனத் தினர் செயல்பட வேண்டும் என்றார். மேலும் விவசாயி களின் கோரிக்கைக்கு ஏற்ப சூரிய ஒளி மூலம் மின்சக்தி பெற்று இயக்கும் பம்பு செட் மற்றும் அதனுடன் இணைந்த சொட்டு நீர் பாசனம் அமைப் பது தொடர்பாக பயிற்சி நடத்தப்படும் என்றார்.

## <u>வினாடிக்கு 700 கன அடி தண்ணீர் வெளியேற்றம் முன்குறுவை சாகுபடிக்கு பாபநாசம் அணை திறப்பு அமைச்சர் செந்தூர் பாண்டியன் திறந்து வைத்தார்</u>



**நெல்லை,**

பாபநாசம் அணையில் இருந்து முன்குறுவை சாகுபடிக்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. அணை ஷட்டரை அமைச்சர் செந்தூர் பாண்டியன் திறந்து வைத்தார்.

<u>பாபநாசம் அணை</u>

பொதிகை மலையில் உற்பத்தியாகும் தாமிரபரணி ஆறு நெல்லை மாவட்டத்தில் 80 கிலோ மீட்டர் தூரமும், தூத்துக்குடி மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் தூரமும்; ஆக மொத்தம் 120 கிலோ மீட்டர் தூரம் ஓடி வங்க கடலில் கலக்கிறது.

தாமிரபரணி தண்ணீரால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் 83 ஆயிரம் ஏக்கர் நிலம் நேரடி பாசனம் பெறுகிறது. நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய 4 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது.

தாமிரபரணி ஆற்றின் முதன்மை அணையாக பாபநாசம் – காரையாறு அணை அமைந்துள்ளது. அந்த அணையின் மொத்த நீர்மட்டம் 143 அடியாகும். அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 1–ந்தேதி முன்குறுவை சாகுபடிக்கு தண்ணீர்

திறக்கப்படும். இந்த ஆண்டு அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், கடந்த மாதம் 1–ந்தேதி அணை திறக்கப்படவில்லை.

## தண்ணீர் திறப்பு

விவசாயிகள் முன்குறுவை சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். இதை ஏற்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா, பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகளை திறக்க உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் நேற்று பாபநாசம் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதையொட்டி அணையில் சிறப்பு பூஜை நடத்தப்பட்டு, அணையின் ஷட்டர் திறக்கப்பட்டது. அமைச்சர் செந்தூர்பாண்டியன் திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் செந்தூர்பாண்டியன், பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.முத்துகருப்பன், விஜிலா சத்யானந்த், வசந்தி முருகேசன், கலெக்டர் மு.கருணாகரன் உள்ளிட்டோர் ஆற்றில் மலர் தூவினார்கள்.

இது குறித்து அமைச்சர் செந்தூர்பாண்டியன் கூறுகையில், “விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா, பாபநாசம் அணையில் இருந்து பாசனத்துக்கு வினாடிக்கு 700 கன அடி தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளார். அதன் படி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது“ என்றார்.

இது குறித்து கலெக்டர் மு.கருணாகரன் கூறியதாவது:–

## சிக்கனமாக பயன்படுத்துங்கள்

அம்பாசமுத்திரம் தாலுகா தாமிரபரணி பாசன அமைப்பின் கீழ் உள்ள வடக்கு கோடை மேலழகியான், தெற்கு கோடை மேலழகியான், நதியுண்ணி மற்றும் கன்னடியன் ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள 18 ஆயிரத்து 90 ஏக்கர் நேரடி

மற்றும் மறைமுக பாசன பரப்புகளுக்கு குறுவை சாகுபடிக்கு, தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் தற்போது 59.75 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 554 கன அடியாகவும், அணையில் இருந்து வினாடிக்கு 700 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் தென்மேற்கு பருவ மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு மற்றும் பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு தண்ணீர் வழங்கப்படும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, அதிக மகசூல் ஏற்படுத்திட வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 4–ந் தேதி, பாபநாசம் அணையின் நீர்மட்டம் 116 அடியாக இருந்தது. அணைக்கு அப்போது வினாடிக்கு 2100 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டில் நீர்மட்டம் 59.75 அடி மட்டுமே உள்ளது குறிப்பிடத்தக்கது.

<u>அமைச்சர்–கலெக்டரிடம் மனு</u>

பாபநாசம் காரையாறு அணை பகுதியில் வசிக்கும் மக்கள் அமைச்சர் செந்தூர்பாண்டியன், கலெக்டர் மு.கருணாகரன், தாசில்தார் சேதுராமலிங்கம் ஆகியோரிடம் ஒரு மனு கொடுத்தனர். அந்த மனுவில், பாபநாசம் காரையாறு அணைக்கு உள்ளே பாணதீர்த்த அருவி உள்ளது. அங்கு சித்திபுத்தி விநாயகர் கோவில் இருக்கிறது. அந்த கோவிலில் பக்தர்கள் வழிபடவும், பாணதீர்த்த அருவியில் குளித்து முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவும் பாணதீர்த்தஅருவிக்கு மக்கள் படகில் சென்று வந்தனர். தற்போது படகு சவாரி நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் கோவில் மற்றும் அருவிக்கு யாரும் செல்லமுடியவில்லை. எனவே மீண்டும் படகு சவாரியை தொடங்க அனுமதிக்க வேண்டும்“ என்று கூறி உள்ளனர்.

அணை திறப்பு நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் நாராயணபெருமாள், நெல்லை மாநகராட்சி மேயர் (பொறுப்பு) ஜெகநாதன், மாவட்ட கவுன்சிலர் பரமசிவ அய்யப்பன், நகரசபை தலைவி மனோன்மணி பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் முத்துபாண்டியன், மின்வாரிய செயற்பொறியாளர் ஸ்ரீதர், விவசாய சங்க நிர்வாகிகள் சிவகுருநாதன், கசமுத்து, சுப்பையா, சிங்கை அருண் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து வருகிறது</u>**



**மேட்டூர்** : மேட்டூர் அணை நீர்மட்டம் 47.45 அடியாக உள்ளது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை நீர்வரத்து 4,906 கனஅடியாக இருந்தது. இந்நிலையில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர் வரத்து வினாடிக்கு 2,903 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 2000

கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 47.45 அடி, நீர் இருப்பு 16.24 டிஎம்சி.

**<u>சென்னையில் மாம்பழத்தின் விலை அதிகரித்துள்ளது</u>**



**சென்னை** : சென்னையில் மாம்பழத்தின் விலை அதிகரித்துள்ளது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்தும் ஆந்திரா மற்றும் கர்நாடகத்தில் இருந்தும் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு மாம்பழம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. சீசன் முடியும் நிலையில், தற்போது அல்போன்சா, மல்கோவா மற்றும் பங்கனபள்ளி ஆகிய மாம்பழங்களில் விலை அதிகரித்துள்ளது. சென்னை முழுவதும் உள்ள சில்லரை பழ வியாபாரிகள் கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து மாம்பழத்தை கொள்முதல் செய்கின்றனர். இந்நிலையில், மாம்பழ வரத்து குறைந்துள்ளதால் விலையும் அதிகரித்துள்ளதால், சில்லரை விலையில் பங்கனபள்ளி ஒரு கிலோ ரூ.40க்கு விற்றது. இப்போது ^60க்கு விற்கப்படுகிறது. இந்த விலை வரும் நாட்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்று

**தண்டராம்பட்டு**,: தண்டராம்பட்டு வேளாண்மை அலுவலகத்தில் நேற்று காலை விவசாயிகளுக்கு தென்னங்கன்று வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் பாலா தலைமை தாங்கி 400 விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினார்.

மானிய விலையில் நெட்டை ரகம் ரூ25க்கும், நெட்டை குட்டை ரகம் ரூ.15க்கும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர் நடராஜன், துணை வேளாண் அலுவலர் அன்பழகன், உதவி வேளாண் அலுவலர்கள் ரமேஷ், கண்ணன், சுதாகர், சசிகுமார், கிடங்கு மேலாளர் பாலு மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## தெள்ளார் வட்டார விவசாயிகளுக்கு சான்று விதை நெல் உற்பத்தி பயிற்சி

**திருவண்ணாமலை**, : திருவண்ணாமலை மாவட்டம் சி.மா.புதூர் கிராமத்தில் தெள்ளார் வட்டார விவசாயிகள் கூட்டமைப்புக்கு சான்று விதை நெல் உற்பத்தி குறித்து 2 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. திருவண்ணாமலை நபார்டு வங்கி, வேதபுரி வேளாண் அறிவியல் மையம் சார்பில் நடைபெற்ற இந்த பயிற்சியில் நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சுதர்சனம், திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குனர் எஸ்.விஸ்வநாதன் ஆகியோர் கலந்துகொண்டு நபார்டு வங்கி மூலம் வழங்கப்பட உள்ள திட்ட ஒதுக்கீடுகள், விதைப்பண்ணை பதிவு, விதை சுத்திபணி மற்றும் திருந்திய நெல்சாகுபடி குறித்து விளக்கினர். மேலும் விவசாயிகளுக்கு சான்று விதைகளின் பயன்கள் மற்றும் சான்று விதைகளை விற்பனை செய்வதன் மூலம் பெறும் வருவாய் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் வேளாண் அறிவியல் மையத்தை சேர்ந்த மாரிமுத்து, நாராயணன், ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டு தோட்டக்கலை பயிர்களில் தண்டு துளைப்பான் பூச்சியை கட்டுப்படுத்துவது குறித்து செயல் விளக்கங்களை செய்து காண்பித்தனர். முடிவில் சி.மா.புதூர் ஊராட்சி தலைவர் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

**வேளாண் உற்பத்தியில் தொழில் நுட்பங்களை பயன்படுத்தாததால் ஏற்றுமதி செய்ய முடியவில்லைஉழவர் மன்ற விழாவில் தகவல்**

**நாகை,** : வேளாண் உற்பத்தியில் தொழில்நுட்பங்களை பயன்படுத்தாததால் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை என்று உழவர் மன்ற விழாவில் தெரிவிக்கப்பட்டது.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் காரையூர் ஊராட்சி பூசலாங்குடி கிராமத்தில் நபார்டு உதவியுடன் சுவீட் தொண்டு நிறுவனம் சார்பில் உழவர் மன்ற தொடக்க விழா நடைபெற் றது. சுற்றுச்சூழல் ஆர்வலர் ராமையன் தலைமை வகித்தார். சுவீட் தொண்டு நிறுவன நிர்வாக இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். காரையூர் ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் வரவேற்றார். விழாவில், நபார்டு மாவட்ட வளர்ச்சி அலுவ லர் கணேஷ் பேசியதாவது; நாட்டு மக்கள் தொகை யில் 56 சதவீதம் பேர் விவசாயத்தை சார்ந்தே உள்ளனர். அவர்களுக்கு வேளாண்மையில் செலவை குறைத்து மகசூலை அதிகரிக்க பலத்தரப்பட்ட வேளாண். தொழில் நுட்பங்கள் நபார்டு உழவர் மன்றங்களுக்கு வழங்கப்படுகிறது. இவற்றில் மண்ணுக்கேற்ற தொழில் நுட்ப உத்திகளை கையாள் வது அவசியம். அப்போதுதான் தொடர்ந்து மண் தொடர்ந்து பயன்தரும். எனவே மண்ணை ஆய்வு செய்து மண்ணின் தன்மைக்கேற்ப உரமிட வேண்டும். சரியான தொழில்நுட்பங்களை பயன்படுத்த தவறியதால்தான் மாம்பழம், வெற்றிலை, உருளைக்கிழங்கு போன்ற வேளாண். உற்பத்தி பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மன்றங்கள் மூலம் அளிக்கப்படும் தொழில் நுட்பங்களை செயல்படுத்த வேண்டும். உழவர் மன்ற கூட்டமைப்புகளுக்குதான் நபார்டு வங்கி நேரடியாக கடன் உதவி செய்ய முடியும். தனிப்பட்ட ஒரு நபருக்கு கடன் வழங்க இயலாது. எனவே விவசாயிகள் ஒரு குழுவாக உழவர் மன்ற அமைப்பை ஏற்படுத்தி பலன் பெறலாம். ஒவ்வொரு ஊராட்சியிலும் ஏற்படுத்தப்படும் உழவர் மன்றங்கள் தொடர்ந்து செயல்பட்டால் 3 ஆண்டுகளுக்கு நேரடி நிதி உதவி நபார்டு வழங்கும் இவ்வாறு அவர் பேசினார்.

சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய தலைவர் முனைவர் ராஜேந்திரன் பேசுகையில், தற்போது செடி முருங்கை சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு விதை மற்றும் அதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை உழவர் மன்றங்கள் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார். விழாவில், முன்னோடி வங்கி மேலாளர் கதிர்வேல், கால்நடை மருத்துவர் ஜீவானந்தம், கங்களாஞ்சேரி ஐஓபி மேலாளர் சுரேஷ் கென்னடி, கங்களாஞ்சேரி தொடக்க வேளாண். கூட்டுறவு வங்கி செயலாளர் ராமதாஸ், முன்னோடி விவசாயிகள் ராமகிருஷ்ணன், மனோகரன், உழவர் மன்ற தலைவர் வீரராகவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முருகப்பா நன்றி கூறினார்.

## 2.770 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானிய உற்பத்தி இலக்கு

**நாமக்கல்**, : நாமக்கல் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 2.770 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானிய உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், உரங்கள் தடையின்றி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலெக்டர் தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் கலந்தாய்வு கூட்டம், நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்தில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், உரங்கள் இருப்பு மற்றும் விற்பனை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசியதாவது:

நாமக்கல் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 2.770 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானிய உற்பத்தி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த இலக்கினை அடைவதற்கு மிக முக்கியமான வேளாண் இடுபொருளான உரங்களை, பருவம் துவங்குவதற்கு முன்பே, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்க வேண்டும்.

மேலும் சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், நீரில் கரையும் உரங்கள் மற்றும் வேப்பம் புண்ணாக்கு உரங்களை விவசாயிகளின் தேவை அறிந்து, இருப்பு வைத்து

தட்டுப்பாடு இன்றி விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாரியாக, உரங்கள் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது, இருப்பு இல்லாத கூட்டுறவு சங்கத்தினர், உடனடியாக தேவையான உரங்களை இருப்பு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் இப்கோ நிறுவனம், மற்றும் கோரமண்டல் நிறுவன விற்பனை பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீரில் கரையும் உரங்கள் பயன்பாடு குறித்து பயிற்சியளித்தனர். உரங்கள் மற்றும் நீரில் கரையும் உரங்கள் குறித்த கண்காட்சி கூட்ட அரங்கில் அமைக்கப்பட்டிருந்தது.

## முட்டை விலை உயர்வு 365 காசுகளாக நிர்ணயம்

**நாமக்கல்**, : நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் உயர்ந்து, ஒரு முட்டை 365 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முட்டை விற்பனை நிலவரம் பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதையடுத்து, முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 2 காசு உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் விலை 365 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். அதே போல், ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ55 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ70 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) பெங்களூரு- 383, மைசூர்- 388, ஐதராபாத்- 353, மும்பை- 393, விஜயவாடா- 349, கொல்கத்தா- 405, பர்வாலா- 309, டெல்லி- 325 காசுகள்.